செ.கு.எண்: 198 நாள்: 19.11.2011

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 19.11.2011</u>

விருதுநகர் மாவட்டம், **சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து** பாசனத்திட்டத்தின்கீழ் உள்ள கண்மாய்கள் மூலம் பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, விருதுநகர் மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திட்டத்தின்கீழ் உள்ள கண்மாய்கள் மூலம் பாசன சாகுபடிக்காக **20.11.2011 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், விருதுநகர் மாவட்டம், சாஸ்தாகோவில் நீர்த்தேக்க பாசன அமைப்பின்கீழ் உள்ள **3,130 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9